2008 ஏப்ரல் 30]

184—

கண் சிகிச்சைப் பிரிவு

***11222—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில், குளித்தலை தாலுகா மருத்துவமனைக்கு அருகில், திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், கரூர் அரசுத் தலைமை மருத்துவமனையும் கண் சிகிச்சைப் பிரிவுடன் அனைத்து சிறப்புச் சிகிச்சை வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், குளித்தலை அரசு மருத்துவமனைக்குத் தற்போது கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை அரசு மருத்துவமனை, நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், இரண்டாவது முறையாக முதல்வராக இருந்த காலத்திலே, அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த, நம்முடைய பேராசிரியர் அவர்களால் தொடங்கப்பட்டது. குளித்தலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலே, சுமார் ஒரு இலட்சம் பொது மக்கள் அந்த ஒரு மருத்துவமனையையே சிகிச்சைக்காக நம்பியிருக்கிறார்கள். மேலும், நாள்தோறும் 2,000-க்கும் மேற்பட்ட பொது மக்கள் வெளிநோயாளிகளாக வந்து அந்த மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். அந்த மருத்துவமனைக்குக் கண் சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்பது பொது மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். காரணம், கண் சிகிச்சை பெறவேண்டுமென்று சொன்னால், 50 கி.மீ. தூரம் கரூருக்கும், திருச்சிக்கும் சென்று கண்

அறுவை சிகிச்சைப் பெறுவதற்காகப் பொது மக்கள் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், இரண்டாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த காலத்திலே, அவர்களுடைய பிறந்த தின விழாவிலே, ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தினார்கள். அதேபோல, 1971 ஆம் ஆண்டு, தன்னுடைய 48 ஆவது பிறந்த தின விழாவிலே, தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லங்களைத் திறந்தார்கள். 1972 ஆம் ஆண்டு, தன்னுடைய 49 ஆவது பிறந்த நாள் விழாவிலே கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். 1973 ஆம் ஆண்டு அவர்களுடைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. மாணிக்கம்: 50-வது பிறந்த நாள் விழாவிலே, ஏழை மக்களுக்கு ஒளி ஏற்றுகின்ற நல்ல திட்டங்களை அளித்துக் கொண்டிருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில், பொற்கால ஆட்சியில், குளித்தலை அரசு மருத்துவமனையிலே கண் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதல்முறையாக 1972 ஆம் ஆண்டில், பார்வையிழந்தோருக்குக் கண்ணொளி வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. கரூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலிருந்து நடமாடும் கண் மருத்துவக் குழுவினர் மாதம் இருமுறை குளித்தலை மருத்துவமனைப் பகுதிகளுக்கு வந்து, கண் சிகிச்சை அளிப்பதுடன் அவர்களுக்கு மேல் சிகிச்சை தேவைப்பட்டால் கரூர் அரசுத் தலைமை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. மேலும், கரூர் மாவட்டத்தில் 9-க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் அரசு நிதியுதவியுடன் மாவட்டம் முழுவதும் அவ்வப்போது கண் சிகிச்சை

2008 ஏப்ரல் 30]

முகாம்களை நடத்தி, நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகின்றன. எனவே, குளித்தலை அரசு மருத்துவமனையில் தற்போது கண் சிகிச்சைக்கெனத் தனிப் பிரிவு ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை அரசு மருத்துவமனையில், தற்போது கண் சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார்கள். வருங்காலத்திலாவது, அங்குக் கண் சிகிச்சைப் பிரிவைத் தொடங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், அந்த மருத்துவமனையில் 66 படுக்கை வசதிதான் உள்ளது. அதனை 100 படுக்கை வசதி கொண்டதாகத் தரம் உயர்த்தித் தரவும், அதேபோல அங்கே காலியாகவுள்ள நான்கு மருத்துவர் பணியிடங்களை நிரப்பித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில், போளூருக்குப் பிறகு பெரிய கிராமமாக இருப்பது களம்பூர். அந்தக் களம்பூர் பகுதியைச் சுற்றி 25 கிராமங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 25 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அங்கே அந்த மருத்துவமனையிலே சுமார் 400 முதல் 800 பேர் வரை தினமும் சிகிச்சை பெறுகிறார்கள். ஆனால், அங்கே படுக்கை வசதி இல்லை. எனவே, 30 பேர் கொண்ட படுக்கை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அந்தக் கோரிக்கை நிறைவேறுமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு.

திரு. கே. திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையிலுள்ள அரசுப் பொது மருத்துவமனை, சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. இப்பகுதியில் வேப்பூரிலிருந்து அரசூர் வரை அடிக்கடி விபத்துகள் நடைபெற்று, தினமும் உயிர் இழப்புகள் அதிகரித்து வருகின்றன. விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அவசர சிகிச்சைக்குக்கூட கடலூர், விழுப்புரம், பாண்டிச்சேரி மருத்துவமனைகளை நாட வேண்டி உள்ளது. எனவே, இதுபோன்ற விபத்துகளினால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்ற உளுந்தூர்பேட்டை அரசுப் பொது மருத்துவமனையை நவீன முறையில் விரிவுபடுத்த, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டைக்கும், விழுப்புரத்திற்கும் தூரம் குறைவுதான். விழுப்புரத்தில் இப்போது அவசர சிகிச்சை மையம் திறக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவக் கல்லூரியும் தொடங்க இருக்கிறது. உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, நவீன சிகிச்சை அரங்குகள் எல்லாம் அவற்றில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் தேவைப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

2008 ஏப்ரல் 30]

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் வட்டத் தலைமை மருத்துவமனையிலே சிறப்பு மருத்துவர்கள் யாரும் இல்லை. அந்தப் பகுதியிலே திருக்கழுக்குன்றம் வட்டம், திருப்போரூர் பகுதி, செய்யூர் பகுதியிலேயிருந்து ஏராளமான நோயாளிகள், புற நோயாளிகள் வருகிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே கண் சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு, அதேபோன்று, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே புதிதாகக் கண் வங்கியை அமைப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் மருத்துவமனை, அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. அதேபோல, 54 அரசு மருத்துவமனைகளிலும் கண் மருத்துவச் சிகிச்சை மையங்கள் இருக்கின்றன. மேலும், தனியார் தொண்டு நிறுவனங்கள் இதில் அதிகமாக ஆர்வம் எடுத்துக்கொண்டு, அவர்கள் சிசிச்சை அளிக்கிற காரணத்தால், அந்த மருத்துவமனைக்குக் கூடுதலாகத் தேவை இருக்காது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

185—

தொழிற்பேட்டை

***33820—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS